# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# M.C.O.P. No.187/2021

2024–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய XW–3 **வது** நபரின் வாக்குமூலம். (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மலாதேவி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை**

நான் அரசு மேல்நிலைப்பள்ளி வெங்கலம் பெரம்பலூரில் தலைமை ஆசிரியராக பணிபுரிகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். பெரம்பலூர் மாவட்ட கல்வி அலுவலருக்கு சம்மன் கொடுக்கப்பட்டு இறந்த முருகேசன் என்பவரின் பணி ஆவணங்கள் அனைத்தும் எங்கள் பள்ளியில் இருப்பதால் எங்களை நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி சாட்சியம் அளிக்க சொல்லி வந்த கடிதம் சா.த.சா.ஆ.5 ஆகும். இறந்த முருகேசன் எங்கள் பள்ளியில் முதுகலை தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தார். அவர் 2021 ல் இறந்துவிட்டார். அவர் கடைசியாக சம்பளம் வாங்கிய ஊதியச்சீட்டு சா.த.சா.ஆ.6 ஆகும். அவருடைய பணிப்பதிவேட்டின் நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.த.சா.ஆ.7 ஆகும். 31.05.2038 ல் அவர் பணி ஓய்வு பெறுவார். அவர் பணி ஓய்வு பெறுவதற்கு இன்னும் 14 வருடங்கள் உள்ளது. அவர் வரும்காலத்தில்

கூடுதலாக சம்பளம் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. அவர் பிற்காலத்தில் ரூ.1,50,000/- வரை சம்பளம் பெறுவார்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

முருகேசன் எதிர்காலத்தில் ரூ.1,50,000/- சம்பளம் வாங்குவார் என்ற கணக்கு எதுவும் நான் கொண்டுவரவில்லை. அனுமானத்தின் பேரில் தான் சொன்னேன். அவர் பிடித்தம் போக ரூ.30,223/- ஊதியமாக பெற்றார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அவருக்கு பென்சன் எதுவும் இல்லை. அவரது குடும்பத்திற்கு பணப்பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளது. CPS Amount கொடுக்கப்படவில்லை. அவரது குடும்பத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இல்லை

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.